CC No.11/2015
Date 23.04.2024
PW : 2

**பெயர் - திருமதி.குசலகுமாரி த-பெ.**

எதிரிகள் ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

வழக்கு சம்பவ இடமான டிரான்பார்ம் அருகே ராஜா, குமார் ஆகியோர் வீடு உள்ளதா என்றால் சரிதான். டிரான்பார்ம் அருகே சேது ராஜான் வீடு உள்ளதா என்றால் இல்லை. 07/04/2014 ஆம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு உங்கள் மகன் ரேசன் கடைக்கு சென்றிருந்தார் என்றால் அன்றைய தினம் காலை 07.00 மணிக்கு சென்றிருந்தார்.

எனது மகன் ரேசன் கடையில் வரிசையில் நின்ற போது அரிசி வாங்க நிறைய நபர்கள் இருந்தார்கள் என்றால் இல்லை எனது மகனை தாக்கிய நபர்கள் மட்டும் தான் இருந்தார்கள். . அன்றைய தினம் எனது மகன் ரேசன் கார்டு எடுத்து சென்றிருந்தார். சம்பவ தினத்தன்று அரிசி வாங்குவது சம்பந்தமாக ரேசன் கார்டில் பதிவு ஏற்படுத்தப்பட்டிருந்தா என்றால் பதிவு ஏற்படுத்தபடவில்லை ரேசன் கடை 9.00 மணிக்கு தான் திறக்கும்.

வழக்கு சம்பவத்தினை பொதுமக்கள் நிறைய நபர்கள் பார்த்தார்களா என்றால் நான் சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு சென்ற போது அடித்த நபர்கள் மற்றும் மற்ற நபர்களும் இருந்தார்கள் நான் போகும் போது பார்த்தேன். மேற்படி பொதுமக்களின் பெயர் தற்போது ஞாபகமில்லை. போலிசார் விசாரணையின் போது ரேசன் கார்டினை பார்வையிட்டாரா என்றால் பார்வையிடவில்லை.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று உங்கள் ஊர் அருகே இருந்த டிரான்பார்ம் பக்கம் அருகே அ.சா.1 வரும் போது அன்றைய தினம் இரவு 07.00 மணி இருக்கும் என்றால் சரியல்ல காலை 07.00 மணி இருக்கும். எனது மகன் வழக்கு சம்பவத்தினை குறித்து போன் மூலம் தெரிவித்த போது அ.சா.1 வீட்டில் தான் இருந்தார் அவர் அடித்துவிட்டதாக சொல்லும் போது நான் உடன் இருந்தேன்.

உங்கள் மகனை வீட்டிற்கு கூட்டி வரும் போது நீங்கள் வீட்டில் இருந்தீற்களா என்றால் நான் சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு சென்றேன். சம்பவ இடத்திலிருந்து எனது கணவரை வீட்டிற்கு அழைத்து சென்றேனா என்றால் ஆம்னிக்கு போன்

செய்து ஐகிரவுண்ட் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன்.

ஊரில் உள்ள டிரான்பார்ம்க்கும் உங்கள் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 5 நிமிடத்தில் சென்றுவிடலாம். டிரான்பார்ம்க்கும் திருநெல்வேலி அரசு பொது மருத்துமனைக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் தெரியாது.

திருநெல்வேலி அரசு மருத்துமனைக்கு இரவு 10.00 மணிக்கு நான் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேனா என்றால் இல்லை வழக்கு சம்பவ தினத்தன்று காலை சுமார் 08.00, 08.30 மணிக்கு சிகிச்சைக்கு சேர்த்தேன். வழக்கு சம்பவம் குறித்து மருத்துவரிடம் நான் தான் தெரிவித்தேன். ஆயுதங்களால் தாக்கியதாக நீங்கள் மருத்துவரிடம் தெரிவித்திற்களா என்றால் ஞாபகமில்லை.

உங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே முன்பகை உள்ளதா என்றால் எதுவும் இல்லை. புகார் மனுவினை யார் எழுதினார் என்று தெரியாது எனது வீட்டுகாரர் தொலைபேசி மூலம் காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார். நீங்கள் சொல்வது போல் எந்த வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்றும் அதனடிப்படையில் எந்த புகாரும் அளிக்கவில்லையென்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

**CC No.11/2015**
**Date 23.04.2024**
**PW : 1**
**பெயர் - விஜயகுமார் த-பெ.**

எதிரிகள் ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

வழக்கு சம்பவ இடமான டிரான்பார்ம் அருகே ராஜா, குமார் ஆகியோர் வீடு உள்ளதா என்றால் டிரான்ஸ்பார்ம் அருகில் இல்லை தெருவிற்கு மேற்கே உள்ளது. டிரான்பார்ம் அருகே சேது ராஜான் வீடு உள்ளதா என்றால் சேதுராஜன் வீடு தெற்கு தெருவில் பிள்ளையார்கோவில் தெருவில் உள்ளது. 07/04/2014 ஆம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு உங்கள் மகன் ரேசன் கடைக்கு சென்றிருந்தார் என்றால் அன்றைய தினம் காலை 07.00 மணிக்கு சென்றிருந்தார்.

எனது மகன் ரேசன் கடையில் வரிசையில் நின்ற போது அரிசி வாங்க நிறைய நபர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். அன்றைய தினம் எனது மகன் ரேசன் கார்டு எடுத்து சென்றிருந்தார். சம்பவ தினத்தன்று அரிசி வாங்குவது சம்பந்தமாக ரேசன் கார்டில் பதிவு ஏற்படுத்தப்பட்டிருந்தா என்றால் பதிவு ஏற்படுத்தபடவில்லை காயம் ஏற்பட்டதால் மருத்துவமனைக்கு சென்றிருந்தேன்.

வழக்கு சம்பவத்தினை பொதுமக்கள் நிறைய நபர்கள் பார்த்தார்களா என்றால் எனக்கு தெரியாது. நான் தகவல் கிடைத்து தான் சம்பவ இடத்திற்கு வந்தேன். வழக்கு சம்பவமே நடைபெறாத காரணத்தினால் தான் உங்கள் மகன் சம்பவத்தினை பார்த்த பொதுமக்கள் பெயரை குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையின் போது ரேசன் கார்டினை பார்வையிட்டாரா என்றால் பார்வையிடவில்லை.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று உங்கள் ஊர் அருகே இருந்த டிரான்பார்ம் பக்கம் அருகே நீங்கள் வரும் போது அன்றைய தினம் இரவு 07.00 மணி இருக்கும் என்றால் சரியல்ல வழக்கு சம்பவம் காலை 07.00 மணிக்கு நடந்தது. எனது மகனை கூட்டி வர சென்ற போது எனது மனைவியிடம் வழக்கு சம்பவத்தினை பற்றி தெரிவித்தேனா என்றால் தெரிவிக்கவில்லை. உங்கள் மகனை வீட்டிற்கு கூட்டி வரும் போது உங்கள் மனைவி வீட்டில் இருந்தாரா என்றால் எனக்கும் காயம் ஏற்பட்டதால் எனது மனைவி சம்பவ இடத்திற்கு வந்து என்னை மருத்துவமனைக்கு

அழைத்து சென்றார்.

ஊரில் உள்ள டிரான்பார்ம்க்கும் உங்கள் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் வீட்டிலிருந்து சுமார் 500 மீட்டர் தூரம் இருக்கும். வீட்டிலிருந்து பார்த்தால் டிரான்பார்ம் தெரியாது. டிரான்பார்ம்க்கும் திருநெல்வேலி அரசு பொது மருத்துமனைக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் தெரியாது. வழக்கு சம்பவ இடத்திலிருந்து வீட்டிற்கு சென்று தான் மருத்துவமனை சென்றீர்கள் என்றால் சரியல்ல நேரடியாக மருத்துவமனைக்கு தான் சென்றேன்.

திருநெல்வேலி அரசு மருத்துமனைக்கு இரவு 10.00 மணிக்கு நான் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேனா என்றால் இல்லை வழக்கு சம்பவ தினத்தன்று காலை 09.00 மணிக்கு சிகிச்கசக்கு சேர்ந்தேன். மருத்துவரிடம் கம்பால் தான் தாக்கியதாக குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றால் மருத்துவர் என்னிடம் கேட்கவில்லை. நான் மயக்கத்தில் இருந்தேன். உங்கள் மகனுக்கு ஏற்பட்ட காயத்தினை குறித்த விபரங்களை மருத்துவரிடம் நீங்கள் தான் தெரிவித்தீர்கள் என்றால் நான் தெரிவிக்கவில்லை. பருத்திபாடு ரேசன் கடையிலிருந்து எனது ஊருக்கு TN 72 AV 7522 இருசக்கர வாகனத்தில் வந்தேன்.

உங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே முன்பகை உள்ளதா என்றால் எதுவும் இல்லை. சம்பவ தினத்திற்கு முந்தைய நாள் இரவு எங்கள் வீட்டில் எதிரி சந்திரபோஸ் சாப்பிட்டுவிட்டு சென்றார். புகார் மனுவினை காவல்நிலைய ரைட்டர் எழுதினார். பருத்திபாட்டில் 2, 3 டிரான்பார்ம் உள்ளது என்றால் எங்கள் ஊரில் ஒரே டிரான்பார்ம் தான் உள்ளது. நான் சொல்வது போல் எந்த வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்றும் அதனடிப்படையில் எந்த புகாரும் அளிக்கவில்லையென்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**